**உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம் - 2019**

-----------------------------------------------------------------------------------------

உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 யூன் 29 ஆம் திகதிய 2477 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவு, 2009 யூன் 29 ஆந் திகதிய 0129/0130 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கைகள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் 2013 இடையில் கைசாத்திட்ட பெப்ரவரி 13 ஆந் திகதிய 2977 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

செயற்திட்டத்தின் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மன்னார், வவுனியா, புத்தளம் மற்றும் சிலாபம் மாவட்டங்களலுள்ள நகர மக்களின் பௌதீக நலன்களை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த கிரயம் ரூபா 19,165 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 163.33 மில்லியனானதுடன் அதில் ஆசிய அபிவிருத்தி வங்கியால் ரூபா 11,809 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 99.78 மில்லியன் கடனாக வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 2,649 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 23.22 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் மானியமாக வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. நெதர்லாந்து நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (என்ரீஎவ்) நீர் நிதியளிப்பு பங்குபற்றல் வசதியிலிருந்து ரூபா 228 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2 மில்லியன் மானியமாக ஆசிய அபிவிருத்தி வங்கி ஊடாக வழங்குவதற்கும் உடன்பாடு காணப்பட்டதுடன் மிகுதி ரூபா 4,479 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 38.33 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்பு செய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2009 நவம்பர் 13 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறானினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2018 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ்

கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பங்களிப்புகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது | 135.47 | அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பு குறைத்துக் கூறல் | செலுத்தப்பட்ட வற் அரசாங்க நிதிக்கு எதிராக சரிசெய்யப்பட முடியும் | நிதிக்கூற்றுக்களில் மொத்த அரசாங்க பங்களிப்புகள் காட்டப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 வரை கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்ட வட்டிக் கட்டணங்கள் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 404.10 | வெளிநாட்டு கைதவிர்ப்புகள் குறைத்துக் கூறல் | இது நிதி அமைச்சின் செலவினமாக கருத்தப்பட்டது. ஆகவே, கணக்கிற்கு கொண்டுவரப் பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் மொத்த கைதவிர்ப்புகள் காட்டப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏடிபீ இற்கு செய்யப்பட்ட மீளளிப்பு ரூபா 82,869 ஆக இருந்தது. வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | | ஏடிபீ இற்கு செய்யப்பட்ட மீளளிப்பில் வித்தியாசம். | செயற்திட்டமானது இலங்கை மத்திய வங்கியுடன் கட்டுநிதிக் கணக்கில் கைதவிர்ப்பு இணக்கம் செய்யப்பட்டது. இலங்கை ரூபா | ஆசிய அபிவிருத்தி வங்கி கூற்றுடன் கட்டுநிதி கணக்கு மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மற்றும் ஏடிபீ என்பவற்றாற் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இது முறையே ஐ.அ.டொலர் 449 மற்றும் ஐ.அ.டொலர் 20 ஆக இருந்தது. எவ்வாறாயினும், ஐ.அ.டொலர் 429 ஆன வித்தியாசத்தை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுமதி ரூபா 82,869.54 இற்கு சமமாக மீளளிப்பு செய்யப்பட்ட தொகை ஐ.அ.டொலர் 469.23 இருந்ததுடன் செயற்திட்டம் இதனை ஏடிபீ இற்கு அறிவித்திருந்தது. |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

செயற்திட்டமானது நீர் துறை அபிவிருத்தி மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் வடக்கு மற்றும் வட மேல் பிராந்தியங்களில் நீர் துறை நிறுவனங்களை வலுப்படுத்தல் போன்ற கூறுகளின் கீழ் நகர மக்களைப் போல பௌதீக ரீதியாக முன்னேற்றும் நோக்கில் வடக்கு மற்றும் வட மேல் மாகாணங்களில் பல்வேறு நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்களை அமுலாக்குகின்றது.

| | நடவடிக்கை | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயராற்றல் இலக்கு | அடையப்பட்டது | விளைவு | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | | அலகுகள் | அலகுகள் | | |
| | **பிரதான பரிமாற்ற மற்றும் விநியோக முறைமைக்கான குழாய்கள், பொருத்திகள் மற்றும் வால்புகள் வழங்கி பொருத்துதல்** | | | | |
| (அ) | வவுனியாவில் பரிமாற்ற வழிகளின் குழாயிடல் | 24 கிமீ | 22 கிமீ | பூர்த்தியாக்கலிலுள்ள தாமதத்தால் தொடர்புபட்ட கிரயங்கள் அதிகரிக்கும் | செயற்திட்ட காலப்பகுதிக்குள் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மன்னாரில் எழுத்தூர் முதல் பேசாலை வரை பரிமாற்ற வழிகளின் குழாயிடல் | 16 கிமீ | 11 கிமீ | கடன் காலப்பகுதி 2019 செப்தெம்பரில் முடிவடைந்துள்ளது. எனவே, அரசாங்கத்திற்கு மேலதிக சுமை ஏற்படக் கூடும். | வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சிலாபம் முதல் புத்தளம் வரை விநியோக வழிகளின் குழாயிடல் | 48.9 கிமீ | 36 கிமீ | செயற்திட்ட காலப் பகுதிக்குள் வேலைகளை பூர்த்தியாக்குவதில் தாமதப்படும் சாத்தியம் | வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டமானது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதியை கருத்திற்கொள்ளாமல் பாராளுமன்ற உறுப்பினரால் செய்யப்பட்ட வேண்டுகையில் ரூபா 244.88 மில்லியன் கிரயத்தில் 2018 செப்தெம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் 04 மேலதிக குழாய்கள் குழாயிடல் ஒப்பந்தங்களை 03 ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கியிருந்தது. 28.5 கிமீ மொத்த குழாயிடல் தூரத்தில், மன்னார் மாவட்டத்தில் 16 கிமீ தூரம் ஒரே ஒப்பந்தகாரருகக்கு இரண்டு ஒப்பந்தங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட காலப்பகுதி இறுதி வரையும் வேலைகள் பூர்த்தியாக்ககப்படாது இருந்தது. | நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் சிபார்சுகளுடன் குழாயிடல் வேலைகள் நீடிக்கப்பட்டிருந்தது. வேலையை நிறைவேற்றும் நோக்கில் மன்னாரில் 16 கிமீ தூரத்தை இரண்டு ஒப்பந்தங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கேள்வி நடைமுறையின் பிரகாரம் ஒரு ஒப்பந்தகாரர் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இது ஒரே ஒப்பந்தகாரருக்கே வழங்கப்பட்டிருந்தது. | செயற்திட்டமானது புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுவதற்கு முன்னர் செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி இயலுமையை மதிப்பிட வேண்டும். |
| (ஆ) | PIPES/MAN/29-A மற்றும் PIPES/MAN/29-B என்ற பெயருடைய ஒப்பந்தங்கள் 2018 திசெம்பர் 31 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும் அந்த ஒப்பந்தங்களின் வேலைகள் செயற்திட்ட பணிப்பாளரிடமிருந்து பூர்தியாக்கல் காலப்பகுதியின் நீடிப்புக்காக அனுமதி பெற்றுக் கொள்ளாமல் 2019 திசெம்பர் 31 இன் பின்னரும் தொடருகின்றன. | சேயற்திட்ட நடவடிக்கைகளின் கண்காணிப்பு பொறிமுறை நலிவு காரணமாக செயற்திட்ட பூர்த்தியாக்கலில் தாமதம். | குழாய்கள் பொருத்தலின் போது பாரிய மழை காரணமாக நீர் நிலைகள் உயர்ந்தமை, புகையிரத திணைக்களத்தால் புகையிரத குறுக்கு பாதைக்கு அனுமதி வழங்குதல், ஏப்ரல் 21 இல் இடம்பெற்ற குண்டு வெடிப்பு போன்றன காரணமாக ஒப்பந்தங்கள் தாமதப்பட்டன. எனினும் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு ஒப்பநதகாரர் அறிவுறுத்தப்பட்டிருந்தார். | 2019 ஒக்தோபரில் கடன் முடிவுறுத்தப்பட்டதிலிருந்து செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சிலாபம், புத்தளம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் பல்வேறு ஒப்பந்தங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும், உரிய காணிகளின் | செயற்திட்ட பயன்படுத்தலின் தாமதத்தின் பாதிப்பு காணிகளின் உரிமையாண்மை மாற்றத்தில் | காணிச் சுவீகரிப்பு மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு உரித்துரிமையை மாற்றுதல் என்பன | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையானது முற்பணம் செலுத்திய காணிகளின் உரித்துரிமையை மாற்றிப் பெறுவதற்கு உடனடியாக |

| | | | |
|---|---|---|---|
| உரிமையாண்மை 2019 ஒக்தோபர் 31 இல் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | தாமதத்தின் சாத்தியம். | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை காணிப் பிரிவால் கையாளப்பட்டன. ரூபா 6,847,530.54 கிரயத்திற்காக சொத்துப் படிவத்தை காணிப் பிரிவு சமர்ப்பித்திருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| வைப்புக்களின் தகுதிக் காலப்பகுதி காலவதியான போதிலும், வீதி சீர்ப்படுத்தல் வேலைகளிற்காக 2016 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வங்கி கணக்கில் செய்யப்பட்ட ரூபா 49,445,124.44 ஆன வைப்புக்கள் 2019 திசெம்பர் 31 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிதி முகமைத்துவம் நலிவாக உள்ளது | வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செய்யப்பட்ட வைப்புக்களை அறவீடு செய்வதற்கு உத்தியோகத்தல்கள் செயற்பாட்டில் உள்ளனர். | நிலுவையாவிருக்கின்ற மீதிகளை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 தீர்வு காணப்படாதிருந்த முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது கமநல திணைக்களத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளாமல் வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளருடன் 03 குளங்கள் புதுப்பித்தல் மற்றும் பதியகுளம் மற்றும் கற்குளம் நெற் பயிர்ச் செய்கை காணியின் மட்டப்படுத்தல் என்பவற்றிற்கு 2014 இல் புரிந்துணர்வு விஞ்ஞாபணமொன்று கைச்சாத்திட்டிருந்தது. எவ்வறாயினும், பின்னர் உதவி ஆணையாளர் அதன்படி வேலைகளை செய்திருக்கவில்லை ஆகவே, வேலைகள் தாமதப்பட்டிருந்தது. இதன்விளைவால் இலங்கை அரசாங்கத்திமிருந்து பெறப்பட்ட பங்களிப்பில் செயற்திட்டமானது இழப்பீடு மற்றும் முன்னைய | செயற்திட்டமானது இழப்பீடு மற்றும் வேறு உட்டகட்டமைப்பு வசதிகள் என்பனவாக மேலதிகமாக ரூபா 21.8 மில்லியன் ஏற்றிருந்தது. | நாங்கள் வவுனியா அரசாங்க அதிபர் மற்றும் கமநல திணைக்கள பணிப்பாளர் நாயகம் என்போரிற்கு அந்த நட்டங்களை ஏற்கனவே அறிவித்திருந்தோம். இந்த விடயம் ஏற்கனவே தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சட்ட உத்தியோகத்தர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் என்பவற்றிற்கு முன்வைக்கப்பட்டது. | செயற்திட்டமானது கணக்கொழிப்பு செய்வதற்கு முன்னர் இந்த விடயத்தை தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ஆண்டுகளின் வேறு உட்டகட்டமைப்பு வசதிகள் என்பனவாக மேலதிகமாக ரூபா 21.8 மில்லியன் செலுத்தியிருந்தது. | | | |
| (ஆ) 2013 ஏப்ரல் 05 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், செயற்திட்ட முடிவுறுத்தல் நடவடிக்கைகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கு பொருத்தமான பொறிமுறையை அமுலாக்குவதற்கு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை என்பன இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வாறாயினும், பொருத்தமான பொறிமுறை 2019 திசெம்பர் 31 வரையும் இரண்டு தரப்பினராலும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட இலக்குகளை அடைந்திருக்காமைக்கான சாத்தியம். | நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு, செயற்திட்டம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை என்பவற்றால் அமுலாக்கப்பட்டிருந்த செயற்திட்ட நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு பல பொறிமுறைகள் உள்ளன. | செயற்திட்டமானது கணக்கொழிப்பு செய்வதற்கு முன்னர் இந்த விடயத்தை தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| 2016 யூலை 10 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 133 என்பவற்றின் பிரகாரம், உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை சேர்ப்பதற்கோ அல்லது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு செயற்திட்ட நடவடிக்கைகளின் கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வு செய்வதற்கோ செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கட்டுப்பாட்டு முறைமை நலிவாக உள்ளது. | செயற்திட்டத்தின் பதவியணியில் உள்ளக கணக்காய்வாளர் பதவி இருக்கவில்லை. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு ஆண்டுதேறும் கணக்காய்வினை மேற்கொண்டது. | உள்ளக கணக்காய்வாளரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |